2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குதல், நாமக்கல் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதாரம் சிறக்கவும், வேலைவாய்ப்புகள் பெருகவும், மக்கள் தேவைகள் பூர்த்தி அடையவும் வேண்டுமென்றால், ஏட்டுக் கல்வியுடன் தொழிற்கல்வியும் அவசியம் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, தொழிற்கல்வியை ஊக்குவிப்பதிலும், தொழில் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதிலும், முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.*

எனது தலைமையிலான அரசால் வகுக்கப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளைப் பூர்த்தி செய்ய தொழில் கல்வியைப் படித்தவர்களும், தொழில் திறன் பெற்றவர்களும் தேவை. இதனைக் கருத்தில்கொண்டு சென்ற ஆண்டு பத்து புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவும், மாணாக்கர்களின் விருப்பத்தினை நிறைவு செய்யும் வகையிலும், நடப்பாண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மணிகண்டம், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சின்னசேலம், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடையநல்லூர், கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோவில் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலைப்பேட்டை (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய ஐந்து இடங்களில் உள்ள இளைஞர்கள் தொழிற்கல்வி பயின்று வேலைவாய்ப்பு பெற்று, பயனடையும் வகையில் நாற்பது கோடியே நான்கு இலட்சம் ரூபாய் செலவில் ஐந்து புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் எனது தலைமையிலான அரசு கடந்த மூன்று

ஆண்டுகளில் 15 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடங்கியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

மகளிருக்கென அம்பத்தூர், கிண்டி, குள்ளம்பாடி, கடலூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், நாமக்கல், நாகர்கோவில், ஆண்டிப்பட்டி மற்றும் கரூர் ஆகிய இடங்களில் 12 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் சொந்தக் கட்டடம் இல்லாத கடலூர் மற்றும் கரூர் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நாமக்கல் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் மட்டும் இன்று வரை வாடகைக் கட்டடத்தில் வசதிக் குறைவுடன் இயங்கி வருவதாகவும், இதன்காரணமாக மகளிர் பயிற்சி பெறுவதில் அதிக சிரமத்திற்குள்ளாகின்றனர் என்பதும் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மகளிர் சிரமமின்றி தொழிற்பயிற்சி பெறும் வகையில், நாமக்கல் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஆய்வுக்கூடம், வகுப்பறை, அலுவலக அறை, நூலக அறை ஆகிய வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தலைமையிலான இந்த அரசின் நடவடிக்கைகள் வருங்காலத்தில் தொழில் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிக்க வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குக் கட்டடம், தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்குவதற்கான வலைதளம் உருவாக்குதல் மற்றும் புதிய தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை நாடுநர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ய வருவோருக்குப் போதிய வசதிகளை அளிப்பதிலும், அவர்களுக்கு விரைந்து வேலைவாய்ப்புகளை வழங்குவதிலும், தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் பாதுகாப்பினை மேம்படுத்துவதிலும், அவர்களுக்குத் தேவையான மருத்துவ